ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

दाक्षिण्यं स्वजने दया परिजने शाठ्यं सदा दुर्जने
प्रीतिस्साधुजने नयो नृपजने विद्वज्जने चार्जवम् ।
शौर्यं शत्रुजने क्षमा गुरुजने कान्ताजने धृष्टता
ये चैवं पुरुषाः कलासु कुशलास्तेष्वेव लोकस्थितिः ॥

भर्तृहरिः ॥

தம் பந்துஜனங்களிடம் அவர்களுடைய அபிப்ராயத்தை யனுஸரித்து நடப்பது, தம் வேலைக்காரர்களிடம் கருணை அதாவது அவர்களுக்கேற்படும் எவ்வித நஷ்டங்களையும் போக்குவது, துஷ்டர்களிடம் ஸ்நேகமில்லாமல் விலகியிருப்பது, ஆஸ்திகர்களான ஸாதுக்களிடம் பிரியத்துடனிருப்பது, அரசர்களிடம் அனுஸரித்திருப்பது, பண்டிதர்களிடம் கபடமாயிராமல் ருஜுவாய்ப் பழகுவது, சத்ருக்களிடம் தம் பராக்கிரமத்தைக் காண்பிப்பது, தாய் தந்தை ஆசார்யர் முதலானவர்களிடம் பொறுமையுடன் ஸஹித்திருப்பது, தம் பத்நியினிடம் தைர்யத்துடனிருப்பது, என்கிற இந்த வித்தைகளில் எந்த புருஷர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களோ அவர்களிடமே இவ்வுலக மரியாதையானது நன்கு விளங்கும்.

பரலோகத்திலுள்ள உத்தமமான சுகத்தைப் பெறவேண்டி அதற்குற்ற சிறந்த ஸாதனங்களை அனுஷ்டிப்போர்களும் இவ்வுலகிலுள்ள வரையில் இங்கு அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் அனுஷ்டித்தே தீரவேண்டும். அவ்விதம் செய்யாவிட்டால் நம்மால் எதிர்பார்க்கப்படும் பரலோக சுகமும் சுலபமாய் அடையமுடியாது. ஏனென்றால் பெரியோர்களிடம் நாம் பக்தியுடன் மரியாதையாய் இல்லாவிட்டால் அவர்கள் சாபமேற்படும். ராஜாக்களிடம் நாம் மரியாதைக் குறைவாயிருந்தால் அதற்குற்ற பலனை அனுபவிக்கும்படி நேரும். இவைகளாலெல்லாம் நமக்குப்பலவித விக்னங்களேற்படும் என்பது பிரஸித்தமே. ஆகையால் உலக மரியாதையை எப்படிக் காப்பாற்றவேண்டுமோ அவ்விதம் அவச்யம் அதையும் பரிபாலிக்கவேண்டும் என்று அதைப் பாதுகாக்க வேண்டிய முறையைத் தான் இங்கு ஒரு பெரியார் விவரித்துக் காட்டியிருக்கின்றார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

# அத்வைத ஸபா.

திருச்சி ஜில்லாவில் பிரஸித்தமாயுள்ள நங்கவரம் என்னும் கிராமத்தில் அந்த ஜில்லாவிற்குச் சிரோபூஷணமாய் விளங்கிக் கொண்டிருந்தவரும், லௌகிகம், வைதிகம் முதலான சகல காரியங்களிலும் மிகவும் சக்தி பொருந்தியவரும் எவரும் வியக்கக் கூடிய சிறந்த ஞானமுடையவரும் தர்மப் பிரபுவென்று பல்லோராலும் போற்றப்படக்கூடிய விசேஷ கீர்த்தி பெற்றவர்களுமான பிர்மஸ்ரீ ராஜப்பய்யரவர்கள் தம் குடும்பக்ஷேமத்தையும் முக்கியமாய் லோகக்ஷேமத்தையும் பெரிதாய்க்கருதி சென்ற 1924 ௵ எப்ரல் மாதத்தில் வெகுகாலமாய்த் தம் குடும்பத்தில்நடைபெற்று வரும் ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவ ஸமயத்தில் அத்வைத ஸபையையும் சேர்த்து நடத்திவரும்படி ஏற்பட்ட ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களுடைய ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு அவ்விதமே அந்த வருஷத்தில் பிர்மஸ்ரீ அய்யாவர்கள் பல சிறந்த பண்டிதர்களைக்கொண்டு ஷை உத்ஸவத்தின் முடிவில் 4 தினங்கள் ஸபையை நடத்திப் பண்டிதர்களுக்கும் மற்று முள்ளோர்களுக்கும் விசேஷமான ஆனந்தத்தை யுண்டுபண்ணி அவ்வருஷத்திய உத்ஸவத்தைப் பூர்த்தி செய்தார்கள். பிறகு காலத்தின் கோலத்தால் அய்யரவர்கள் இம்மண் ணுலகைவிட்டு விண் ணுலகத்திற்கேகும்படி நேர்ந்து விட்டது. இதனால் நம் தேசத்திற்கே பெரும் பாக்கியக்குறைவு ஏற்பட்டதென்று செப்பாதார் யாருமிலர். அப்பால் ஸ்ரீ ராமபத்திருக்கு லக்ஷ்மணர்போலும் தர்மநந்தருக்கு அர்ஜுனன்போலும் அய்யரவர்களுக்கு ஸகோதராய் விளங்குகிறவரும் சிறந்த நற்குணங்களுக் கிருப்பிடமாய்ப் பிரகாசிப்பவருமான பிர்மஸ்ரீ நடே

சய்யாவர்களும் உத்தம குணங்களாலும் பெரியோர்களிடம்இயற் கையிலமர்ந்த பக்தியாலும் தர்மகாரியங்களில் ஏற்பட்டிருக்கும் சிரத்தையாலும் சிறுவயதிலிருப்பினும் பலாலும் புகழப்படக் கூடிய பெருந்தன்மை பெற்றவருமான ஷை அய்யாவர்களுடைய அருமைப் புதல்வரான பிர்மஸ்ரீ ரெங்கனுதய்யாவர்களும் தங்கள் தந்தையவர்களால் குடும்ப க்ஷேமத்தையுத்தேசித்துத் துவக்கப் பட்ட அத்வைத ஸபையை நம்மாலியன்றவரையில் நடத்தி ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகள்வர்களுடைய அனுக்கிரகத்திற்கும் பண்டித சிரோமணிகளின் அன்பார்ந்த வாழ்த்துக்கும் பாத்திரர் களாகிப் பிறவிப்பயனைப் பெறவேண்டுமெனத் தீர்மானித்து இவ் வருஷத்திலும் நாளது சித்திரை மாதத்தில் வழக்கம்போல்சென்ற ஸ்ரீராமநவமி மஹோத்ஸவத்தில் ஆருவது தினம் முதற்கொண்டு அத்வைத ஸபை நடத்துவதாயும் அதற்காகப் பண்டிதர்கள் அவ சியம் விஜயம் செய்ய வேண்டுமென்றும் பத்திரிகை மூலமாக முந்தியே அறிவித்து வித்வான்களுடைய வரவை எதிர்பார்த்திருந் தார்கள். இவர்களுடைய அபிப்பிராயத்திற்கிணங்க கும்பகோ ணம் அத்வைதஸபா பிர்தானபண்டிதர் பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரியள், சித்தூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரதமபண்டிதர் பிர் மஸ்ரீ க.ச. கிருஷ்ணசாஸ்திரியள், மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்ஸிபல் பிர்மஸ்ரீ வெங்கிடசுப்பா சாஸ்திரியள், சிதம்பரம் ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்ஸிபல் பிர்மஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி தீக்ஷகர், திருவானைக்காவல், கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு அத் வைதகலாசாலை உபாத்தியாயர் பிர்மஸ்ரீ விசுவநாதசாஸ்திரியள், ஷை ஸ்ரீஜகத்குருஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் பிர்மஸ்ரீ ப. பஞ் சாபகேசசாஸ்திரியள், போலகம் பிர்மஸ்ரீ சுந்தாசாஸ்திரியள், மல் லியக்கரை பிர்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகள், ஆங்கரை பிர்மஸ்ரீ ரெங்கஸாமி சாஸ்திரியள், பிர்மஸ்ரீ ப. வைத்தினுதசாஸ்திரியள் முதலான பல பண்டிதர்கள் வந்து ஸபையை அலங்கரித்தார்கள். பண்டிதர்களைக்கண்டவுடன் பிர்மஸ்ரீ ரெங்கனுதய்யாவர்கள் அதிக ஆனந்தத்துடன் அவாவர்களுக்கும் வேண்டியவாறு ஜாகை முத லான ஸௌகர்யங்களையும் நன்கு செய்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்து விட்டார்கள். ஒவ்வொரு தினமும் காலை 8 மணி முதல் சாஸ்திர வாக்கியார்த்தங்களும் மாலையில் $4\frac{1}{2}$ மணிமுதல் $6\frac{1}{4}$ மணி

வரையிலும் ராத்திரி 7½ மணி முதல் 9½ மணி வரையிலும் உபந்யாஸங்களும் நன்கு நடைபெற்றன. ஒவ்வொரு சமயங்களிலும் பிர்மஸ்ரீ அய்யாவர்கள் ஸபைக்கு நேரில் வந்து பண்டிதர்களையும் மற்றும் ஸபைக்குவரும் கனவான்களையும் வரவேற்றுத் தாமும் அவ்விடத்திலேயே இருந்துகொண்டு விஷயங்களைக் கவனிப்பார்கள். ஒவ்வொரு தினமும் கிராமவாஸி அசேஷ மஹாஜனங்களுக்கும் கிராமாந்தரங்களிலிருந்தும் வந்திருக்கும் இதர ஜனங்களுக்கும் வெகு விமர்சையாய் ஸந்தர்ப்பணையை நடத்திவைத்தார்கள். ஒவ்வொருநாளும் ராத்திரி 10 மணிக்குமேல் சிறந்த பாகவத கோஷ்டிகளால் உத்ஸவஸம்பிரதாயமாகக் கானங்களும் நர்த்தனங்களும் பல பக்கவாத்தியங்களுடன் நன்கு நடைபெற்றன. முடிவு தினத்தன்று மேளவாத்தியங்களுடனும் பாகவத கோஷ்டிகளுடைய கீத நர்த்தனங்களுடனும் ஆயிரம் சூர்யர்கள் ஏககாலத்தில் பிரகாசிப்பதுபோல் விளங்கும் உத்தமமான விமானத்தில் ஸ்ரீராமபிரானுக்கு ஊர்வலமும் நடைபெற்றது. பிறகு ராத்திரி 9 மணி சுமாருக்கு நான்கு தினங்களாக விஜயம்செய்து ஷை ஸபையை நன்கு நடத்திவைத்தவரும் நம் அய்யாவர்களுக்கு சிறிய தகப்பனாரும் தர்மப்பிரபுவுமாகிய பிர்மஸ்ரீ சுப்பராமய்யாவர்கள் முன்னிலையில் அவர்களின் அபிப்பிராயப்படி ஸகல பண்டிதர்களுக்கும் உசிதம்போல் சந்தனம் தாம்பூலங்கள் வழங்கி விசேஷமரியாதைகள் செய்யப்பட்டு மற்றும் பலவிடங்களிலிருந்தும் வந்திருந்த கனவான்களுக்கும் ஸாமான்ய ஜனங்களுக்கும் சந்தன, புஷ்ப, தாம்பூலங்கள் கொடுக்கப்பட்டன. முடிவில் பிர்மஸ்ரீ ரெங்கனாதய்யர் அவர்கள், பண்டிதர்கள் விஜயஞ்செய்து இப்பெரிய காரியத்தைப் பூர்த்தி செய்ததினால் தனக்கேற்பட்ட சந்தோஷத்தையும், இவ்விதமே எப்பொழுதும் இந்தக்காரியம் நன்கு நடைபெற வேண்டுமென்று அனுக்கிரகிக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். இவ்வேண்டுகோளைச் செவியுற்ற பண்டித சிகாமணிகள் யாவரும் அடங்காமனமகிழ்ச்சியுடன் ஏகமனதாய்ப் பூர்ணானுக்கிரகம்செய்து உத்ஸவத்தையும் பூர்த்திசெய்தார்கள்.

இவ்விதம் ஒவ்வொரு கிராமங்களிலும் வருஷத்திற்கு ஒரு முறையாகிலும் ஸபை நடக்கும்படி பகவான் அருள் புரிவாராகில் நம் ஸநாதனதர்மங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள் விலகிக் கூடிய சீக்கிரம் லோகக்ஷேமமும் ஏற்படலாம். சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

# சென்னைக் கடற்கரை மதப்பிரசாரகர்களும் அவர்களின் அதிவிசித்திர நோக்கங்களும்.

அறநெறி பிறழாவண்ணம் அரும் பெரும் ஆசார்யர்கள்
அவனியிலவதரித்து ஆத்திகதத்துவத்தை—அன்புடன்
[புகட்டிநிற்க

சென்னைமா நகரந்தனில் நூதன "சமாஜத்தார்"
சிலர்தனின் சித்தாந்தங்கள் விந்தையினும் விந்தையாமே.

அன்பார்ந்த ஆரிய சகோதரர்காள்! தற்காலம் சின்னாட்களாகச் சென்னைக் கடற்கரையில் சிற்சில "சமாஜத்தார்" செய்து வரும் பிரசங்கத்தின் பயனாக தன்னிலே கலங்காது வளர்ந்தோங்கும் இளந்திங்கட்போன்ற நமது ஆத்திகாசாரங்கள் தலை தளர்ந்து தடுமாறி நிற்க நேரிடுமென மன முளைந்து ஈண்டு சில எழுதத்துணிந்தோம். ஐயன்மீர்! மதப்பிரசாரகர்களெனப் போலிவேஷம் பூண்டு உத்தமமறைகளின் உண்மைத்தத்துவமெனப்பலராலும் பரிவுடன் போற்றப்பட்ட ஆத்திகக் கொள்கைகளையும நால் வருண நியமங்களையும், முறையே அவ்வவற்றிற்குரிய அனுட்டானங்களையும் அறவே புறக்கணித்து வருணங்கள் தொழிலைப்பற்றியதென்றும் பிறப்பு உறிமையன்றென்றும், தேசீயவளர்ச்சிக்குக் கலப்பு விவாகம், சமபோஜனம, வருணசாங்கரியம ஆகிய இவைகளே இன்றியமையாச்சாதனங்களென்றும் இன்னும் பலவாறாகத் துணிவுடன் சாற்றி, ஆங்காங்கு இவ்விசித்திரக் கொள்கைகளையே எளிய ஜனங்களுக்குப் புகட்டி ஆத்திகமெனும் கற்பகத்தை அடியுடன் பிடுங்கப் பிரயத்தனம் செய்து வருகின்றார்கள். எனவே இத்தகைய நோக்கங்களை மறுத்து உண்மையை ஊன்றச் செய்தல் ஒவ்வொரு ஸநாதன ஹிந்துவின் கடமையாதல்பற்றி மேற்கூறிய அவர் தம் கொள்கைகட்கு எமது சிற்றறிவுக் கெட்டியவரை உத்திரம் கூற முன்வந்துளோம். இவை சத்துகளில்லாப் பித்துரையாயினும், அக்கருமமும் பொதுநலத்தின்பொருட்டே யாவாதல்

கற்றவர் மற்றவர், பண்டிதர் அனைவரும் தத்தம் அபிப்பிராயங்களை த்தெற்றென வெளியிடுவார்களென நம்புகின்றோம்.

நிற்க, வருணம் நால்வருணமெனப்படுவது தொழிலைப்பற்றியதா அல்லது பிறப்பைப்பற்றியதா வெனச்சற்று ஆராய்வோம். ஊன்றிப் பார்க்குமிடத்து, இவ்வருண நியமமென்பது பிறப்பைப் பற்றியதேயென வெள்ளிடைமலை போற்றோன்றும். இத்தகைய வருண விபாகத்தைப்பற்றி வேதங்களில் ஆங்காங்கு விசதமாகக் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, வேதத்தின் ஓர் பகுதியென ஹிந்துமக்களால் நன்கு மதிக்கப்பெற்ற புருஷசூக்தத்தின்கண், சர்வமகிமை பொருந்திய பரமனின் முகத்தினின்று அந்தணனும், புஜத்தினின்று க்ஷத்திரியனும், துடைகளினின்று வைசியனும், பாதங்களிலிருந்து சூத்திரனும், முறையே உண்டானார்கள் எனக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். ஈண்டோர் விசேஷம் அறியற்பாலது. ஓதல், ஓதுவித்தல் என்ற கடமைகளைச் செலுத்தவேண்டிய காரணம்பற்றி முகத்தினின்று பிராமணனும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செவ்வனே செய்தற்குப் புஜவலிமை இன்றியமையாதல்பற்றி புஜத்தினின்று க்ஷத்திரியனும், வியாபாரம் செய்தற்கு ஊருபலம் முக்கியமானதால் துடையினின்று வைசியனும், மற்றேவல்கள் சரிவரப் புரிவதற்குப் பாதங்களின் வலிமை அவசியமென்ற காரணம்பற்றிப்பாதங்களிலிருந்துசூத்திரனும், முறையே தோன்றினார்களெனக் கண்டுதெளிக.

இனி எனைய வருணத்தினரும் ஒரே ஈசனின் திவ்ய சரீரத்தினின்றுதோன்றினமையால் ஒவ்வொருவருணமும் அதன்தொழிலைப்பற்றியதெனச் சாற்றுதலும் பொருந்தாது. சர்வவியாபியும் எல்லாம் வல்லவருமான ஈசனின் சங்கற்பமாத்திரத்தில் இவ்வருணங்கள் சிருஷ்டி செய்யப்பட்டிருக்க அவ்வற்றிற்குறிய தொழிலைப் பரமன் அனுசரித்தக்கால் அவை உண்டுபண்ணபட்டதென்றும், ஆகவே இந்நால்வருணமும் தொழிலைப்பற்றியதே என்றும், பிறப்பைப்பற்றியது அன்றென்றும் கூறுவதுஎங்ஙனம் அமையும்? அவ்விதம் சாற்றுவது நிற்குணஸ்வரூபியும், ஆதியந்தரகிதரும்,

கருணைவள்ளலுமான கடவுளின் அகண்ட சக்திக்கு ஓர் அளவு கற்பிக்க நேரிடுவதால், அத்தகைய வாதமும் ஒருசிறிதும் அமை யாதென்க. அன்றியும் வருணம் பிறப்பைப் பற்றியதே யென்ப தற்கு வேதத்தின்கண் பற்பல ஆதாரங்கள் உள. அவைகளும் ஆர்யதர்மம் உபபத்திராதிபரவர்களால் எழுதப்பட்டுள்ள ‘‘ ஜாதிநிர் ணயம்’’ ‘‘ சண்டாளஜாதிதத்வநிருபணம் ’’ என்னும் புத்தகங்க ளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளபடியால் யாம் அவற்றை மீண்டும் எடுத்துக்கூறுவது அனுவசியமென விரிவிற்கஞ்சி விடுத்தனம்.

இனிக் கலப்பு விவாகம், சமபோஜனம், இவைகளே தேச முன்னேற்றத்திற்கு இன்றியமையாததெனப் பரிந்துசாற்றும் நமது சமாஜத்தார் கொள்கைகளையும் மறுக்கின்றோம். இஃதை யும் ஆலோசிக்குமிடத்துத் தற்காலத்தில் நமதுபாரதநாடு அடைந் திருக்கும் சீர்கேட்டிற்கு முக்கியகாரணம் வறுமையாகும். நம் தேயமக்களிற் மூன்றிலொரு பாகம் ஜனங்களில் தினம் ஒரே வேளை யுணவைக்கொண்டே ஜீவித்து வருகின்றார்களென்று பொ ருளாதார ஆராய்ச்சி நிபுணர்களால் கணக்கிடப் பட்டிருக்கின்றது. எனவே, தேசத்தை முன்னேற்றமடையும்படி செய்வதற்குப் பொ ருளாதார வளர்ச்சியே இன்றியமையாதது. அதுவும் அறிவு வளர்ச்சி செய்தல், கைத்தொழில் அபிவிருத்தி, சாகுபடியைநன்கு கவனித்து நிலவருமானத்தை அதிகப்படுத்துதல், பருத்தி, சணல் இவைபோன்ற நமது நாட்டு விளைபொருள்களை (Rawpaoducts) சொற்ப விலைக்கு அயல் நாட்டுக்கு ஏற்றுமதிசெய்து அவைகளை யே மீண்டும் உயர்ந்த விலைக்கு இறக்குமதி செய்யாமல் நமது நா ட்டிலேயே துணிநெய்தல், முதலிய தொழில்களை நன்கு ஸ்தா பித்து அபிவிருத்தி செய்தல் முதலியவற்றால் ஏற்படும். நமதேச மக்கள் அடிமைத்தனமும், இவ்வித முன்னேற்றத்திற்கு இடை யூறாக நிற்கின்றதெனினும் நாம் முற்கூறியவாறு உண்மையில் பாடுபடுவோமாகில் நமது ஏழ்மை இந்துமக்களின் வறுமைப்பிணி நீங்குமென்பதிற் சந்தேகமில்லை. நமது இந்து தேசமும் முன் னேற்றமடையும். இத்தகைய அடிப்படையான சாதனங்களைவிட்டு

கலப்பு விவாஹம், சமபோஜனம் இவைகளே தேசமுன்னேற்றத்தை வளர்க்கும் என்று பறை சாற்றும் அவதாரபுருஷர்களின் மதியீனம் இருந்தவாறு என்னே? தற்காலம் நாகரீகத்திலும், செல்வத்திலும், மேம்பாடடைந்த அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் முதலிய தேசங்கள், கைத்தொழில் வளர்ச்சி, ஞானப்பெருக்கு இவைகளால் தழைத்தோங்குகின்றனவே யன்றி கலப்பு விவாகத்தாலும், சமபோஜனத்தாலும் அல்லவென்பது நன்குவிளங்கும். அதுவுமன்றி தேசசரித்திரங்களைக் கவனிக்குமிடத்தும் கலப்பு விவாகம் சமபோஜனம் இவற்றையனுசரிக்கும் தேசங்கள் அனைத்தும் மேம்பாடடைந்ததாகக் காணப்படவில்லை. மற்றைய தேசங்களில் அஃதில்லாமையாலேயே க்ஷீணித்ததாகவும் தெரியவில்லை.

இவ்விதமிருகக்வதோளர்சமாஜத்தில் பிரசாரம்செய்வதற்குத் தாங்கள் பெறும் பண உதவியாலோ அல்லது அறியாமையினாலோ அல்லது தன் ஸமாஜ நோக்கங்கள் ஸத்தியத்திற்கும் ஒப்புயர்வற்றதும் புராதனமானதுமான சனாதனதர்மக் கொள்கைகளுக்கும் முற்றும் மாறானதெனத் தெரிந்திருந்தும் தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்களெனத் தனதுகொள்கையையே முற்றிலும் சாதிக்கவேண்டுமெனக் கங்கணம் பூண்டு தான்றோன்றித் தம்பிரான்களாய் வேதத்திற்கும் சாஸ்திரங்களுக்கும் ஸனாதன தர்மத்திற்கும் சிட்டாசாரங்களுக்கும் முற்றிலும் முரணாக மனம்போனவாறு பிதற்ற முன் வருவது விந்தையிலும் விந்தையே.

அன்றி இக்கலியின் மகிமை இம்மட்டோ? இம்மகான்களின் அபிப்பிராயம் வருணசாங்கர்யத்திற்கும் அனுகுணமாயிருக்குமெனத் தெரியவருகின்றது. அஃதும் தேசமுன்னேற்றத்திற்கும் தேசீய வளர்ச்சிக்கும் உற்றதோர் காரணம்போலும்! ஐய, யாம் இங்கு கேட்கின்றோம். இத்தகைய வருண வியவஸ்தை ஏற்பட்டு வெகுகாலம் சென்றிருக்க அதை இதுகாலமில்லாது இப்பொழுது ஒழித்துவிட வேண்டுமென்று பெருநோக்கம் சில மகான்களுக்கு ஏற்பட்ட காரணம் யாது? வருண நியமங்கள்

விதிவழுவாது பின்பற்றப்பட்டு வந்த முன்னாட்களில் நமது புண்ணிய பூமியான பாரதநாடானது கல்வியிலும் செல்வத்திலும் மேம்பாடடைந்திருந்ததாகவே தெரியவருகின்றது. எனவே, இப்பொழுது நமதுநாடு அடைந்திருக்கும் வறுமைக்கும் தேசிய அபிமானக்குறைவிற்கும் வருண வியவஸ்தை முக்கியகாரணமாக மாட்டாது. தேசம் முன்னேற்றமடையும் விஷயத்தில் கால மாறுபாட்டையனுசரித்து நாமும் நமது புராதனக் கட்டுப்பாடுகளை மாற்றிக் கொள்ளவேண்டுமென்று கூறுவது, அதிமதுரமான கற்கண்டு அப்பொழுதுதித்திப்பாயிருந்தது இப்பொழுதுகசக்கின்றது என்று கூறுவது போலிருக்கின்றது. இனிப்பே இயற்கை குணமாயுள்ள கற்கண்டு கசப்பென்று கூறுவது அதைச்சாப்பிடும் நாக்கின் தோஷமேயன்றி கற்கண்டின் தோஷமாகமாட்டாது. அங்ஙனமே, தற்காலமேற்பட்டுள்ள தேசவறுமைக்கும் வருணவியவஸ்தை உற்ற காரணமாகாதாகையால் அத்தகைய போலிவியாஜங்கொண்டு நம்நாடு மேம்பாடடைவதற்கு இன்றியமையாத பொருளாதார நிலையை வளர்ப்பதில் ஒரு சிறிதும் நாடி உழைக்காது முன்னோர்களான மகான்கள் உலக நன்மையைக் கருதிச் செய்து வைத்த வருணவியவஸ்தையைத்தூற்றிக்கொண்டு திரிவதில் யாது பயன்; உண்மைக்காரணத்தை யறிந்து அதை நிவர்த்திக்கப்பாடுபட்டாலொழிய நமது இந்து தேசம் முன்னுக்கு வராதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இதுவுமன்றி உலகத்திலுள்ள பல்வேறு தேசங்களின் சரித்திர நூற்களை ஆராயுமிடத்து அவ்வத்தேசங்களில் உள்ள மதத்திலும் நமது ஹிந்துமதத்தைப் போலவே பல பிரிவுகள் உள்ளனவென்றும் அத்தேசங்களின் முன்னேற்றத்திற்கு மதமே முக்கிய காரணமாயிருந்திருக்கிறதென்றும் தெரியவருகின்றது. உதாரணமாக ஆங்கில நாடானது ஆதிகாலத்தில் 'பிக்ட்ஸ்' (Picts) ஸ்காட்ஸ் (Scots) என்னும் ஜாதியாரால் வியாபரிக்கப்பட்டிருந்தது, பிறகு ரோமேனியர்களால் ஜயிக்கப்பட்டு கிருஸ்து மதத்தைத் தழுவ ஆரம்பித்ததும், முன்னர் மதவளர்ச்சியும் பின்னர் அதன் காரண

மாம் ஐகபத்தியமும் தேசிய உணர்ச்சியும் ஏற்பட்டு தற்காலம் மகோன்னத நிலைமையில் தழைத்தோங்குகின்றது. அம்மதத்திலும் 'கதோலிக்' (Caholics) 'பிராடடஸ்டண்ட்.' (Protestant) 'பிரஸ்பிடிரியன்' (Pvysleteians) 'க்வேக்கர்' (Quakes) என்ற பலபிரிவினர் இருக்கின்றனர். இவ்விதம் பல பிரிவினர் இருந்தும் தங்கள் தேசத்திற்கு அன்னியர்களால் உபத்திரவம் நேருங்காலத்திலும் மற்றைய சமயங்களிலும் ஒன்றுசேர்ந்து பாடுபட்டிருக்கின்றனரென்பது அவர் புரிந்துள்ள பற்பல போர்களாலேயே (Armada, War of the English succession and Spanish Succession, French Revolntinary War Anglo-German War.) நன்கு விளங்கும். இவ்விதமே மகம்மதின் உபதேசத்தின் பயனாக மகம்மதிய மத வளர்ச்சி உண்டாயிற்றென்றும் அவர்களும் பல்வேறு தேசங்களை ஜயித்து உன்னத ஆட்சி புரிந்தனரென்றும் தெரிகின்றது. எனவே வருணவியவஸ்தையானது ஒரு தேசமுன்னேற்றத்தைத்தடை செய்யும் முக்கியகாரணமாக மாட்டாது. ஐயன்மீர்! அநாதிகாலந்தொடங்கி தெய்வீகமென்று போற்றப்படும் வேதத்திற்கும் வேதார்த்தங்களைப் புகட்டும்சாஸ்திரங்களுக்கும் அனுகுணமாக சாதுர்வர்ண்ய வியவஸ்தையுடன் அமைக்கப்பட்டுள்ள நமது ஹிந்துமதமானது மனிதனுக்கும், பரஞ்சோதியான கடவுளுக்கும் உள்ள ஓர் பரஸ்பர சம்பந்தமாகையால் அதனுட் குறுக்கே புகுந்து புதியதோர் வரையறை செய்வது அறிஞர்களுக்கு நன்றன்று, நன்றன்று. அதனால் ஏற்படும் கேடுகளும் பல உள. இவ்விதம் ஓரே கிறிஸ்தவமதத்தினர்களான 'பிராடெஸ்டெண்டு' (Protestauts) பிரிவினருக்கும் 'குவேக்கர்' (Quakers)களுக்கும் ஏற்பட்ட சச்சரவினாலேயே குவேக்கர்கள் (Quarkers)இங்கிலாந்துவிட்டு 'வேப்ளார்' (May-Flower) எனும் கப்பலேறி அமெரிக்காவில் குடியேறினார்கள். பின்னர் அவர்களிருவர்கட்கும் நடந்த அமெரிக்கன் சுவேச்சை யுத்தத்திற்கும் (War of American Independence) அதன் பயனாக ஆங்கிலேயர்கள் அமெரிக்காவை யிழந்ததற்கும் முக்கியகாரணம் இப்பிரிவேயாகும். அதுவுமன்றி ஸ்பெயின் தேயத்தின

ரும் தன்மதத்தைச் சார்ந்த மற்றொரு பிரிவினரால் குடியேறப் பெற்ற 'ஹாலெண்ட்' (Hallond) ஐ இழக்கும்படி நேர்ந்தது இத்தகைய பிளவினாலேயாம். இன்னும் தேசசரித்திரங்களில் இதைவிளக்கும் திருஷ்டாந்தங்கள் பற்பல உள.

ஆஸ்திக சகோதரர்காள்! மதமென்பதும் வருணவியவஸ்தை யென்பதும் காலத்திற்கிணங்க புதிய புதிய நாகரீகச் சின்னங்களுடன் அணிந்துகொள்ளும் ஓர் அங்கியல்ல. எனவே, மதப் பிரசாரர்களெனப் போலிவேஷம் பூண்டு மனம் போனவாறு பிதற்றித் திரியும் "சமாஜத்தார்களின்" மாயவலையில் சிக்குண்டு மதிமோசம் போகாதீர்கள். அனாதியான வேதத்தைப்பின் பற்றி ஆஸ்திக ஹிந்து மதத்தையனுசரியுங்கள், நமது புராதனமான சாஸ்திரங்களையும் புராண நூற்களையும் நமது முக்கியசித்தாந்தங்களெனக்கைக் கொள்ளுங்கள். மிகப் பிரிவுடன் குழைந்துபேசும் நாஸ்திக சர்ப்பங்களை ஸனாதன தர்மமென்னும் மந்திரக் கயிற்றால் கட்டியடக்குங்கள். இச்சமயத்தில் ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகளின் கருணையால் இத்தகைய ஆஸ்திகத்தை ஜயபேரிகையுடன் ஆரவாரம் செய்யும் நமது ஆரியதர்மம்போன்ற பத்திரிகைகளையாதரியுங்கள். காரிருளில் கலங்கித் தவிக்கும் ஓர் மனிதனுக்கு மிக்க காந்தியுள்ள தீபம் கிடைத்ததுபோல் நமது நற்காலத்திற்கு அனுகுணமாகச் சென்னைமாநகரில் தற்காலம்ஏற்படுத்தப்பட்டுள்ள பிராம்மண மஹாசபைக்கு பிராம்மணர் அனைவர்களும் அங்கத்தினர்களாகி ஆங்காங்கு கிளைச்சபை ஏற்படுத்திப் பிரசார மூலமாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் ஹிந்து ஸனாதன தர்மத்தை நிலை நிறுத்துங்கள்; பல்வேறு துறைகளிலும் புராதன ஆஸ்திக ஹிந்து மதத்திற்கு இடையூறுகள் மிக மலிந்து நிற்கும் இச்சமயம் பண்டித சிகாமணிகள் முன்வந்து ஆங்காங்கு பாமரஜனங்கள்பால் சென்று பிரஸங்கமூலமாய் ஸனாதனதர்மத்தைப் புகட்டுங்கள். இவ்விதம் செய்வோமாயின் நமது 'சமாஜப்' பிரசங்கிகளின் விசித்திர கொள்கைகளாலும் மற்றும் பல நாஸ்திக கொள்கைகளாலும் நமது புராதன ஹிந்துமதத்திற்கு மலினம் ஏற்படா

வண்ணம் பாதுகாத்து " ஹிந்து ஸனாதனதர்மம் " என்ற கற்பக விருக்ஷத்தைத்தளிர்த்தோங்கும்படி செய்து தேசிய வளர்ச்சியை யும் தேசமுன்னேற்றத்தையும் ஸ்தாபிக்கலாமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்விஷயத்தில் எல்லாம் வல்ல இறைவன் நமது நன்முயற்சிக்கு உதவிபுரிவாராக. சுபம் !

ப. வ. கணபதி சாஸ்திரி B. A.

---

# மனத்தை ஜயித்தல்.

(உ௨௪-வது பக்கத்தொடர்ச்சி)

## ஓர் சிறந்த உண்மை.

பூமியில் சமசீதோஷ்ணமுள்ள ஒரே டிகிரியிலுள்ள உயர்ந்த மலைச்சிகரங்கள் பல இருக்கின்றன. அவை ஒன்றுக்கொன்று 2000 மைல்களுக்கு அப்பால் இருப்பனவாகிய இரண்டு மலைச் சிகரங்களை நமது ஆராய்ச்சிக்காக இப்பொழுது எடுத்துக்கொள் வோம். இவைகளில் ஒன்று இங்கு இருப்பதாகவும் மற்றொன்று வடஇந்தியாவிலிருப்பதாகவும் அல்லது இந்த பூமியின் மற்றொரு பாதியிலுள்ள தேசங்களிலிருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். இவைகளில் ஒரு சிகரத்தின்மீது அடுப்பமைத்து தீமூட்டி அப் பளம் சுடுவதாகவும வைத்துக கொள்வோம். அவ்வாறானல், இந்த மலைச் சிகரத்தின் உயர அளவாக இதே டிகிரியிலுள்ள மற் றோர் சிகரத்தின்மீது நாம் வைக்கின்ற அடுப்பில் தீமூட்டவேண் டியதில்லை. இருப்புச்சட்டியில் எண்ணை வார்த்து அப்பளம் போட்டால் போதும். இந்த முதற் சிகரத்திலுள்ள அடுப்பின் தீயினாலேயே அங்குள்ள அப்பளமும் பொறிந்துபக்குவமாகும். இதனால் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் என்ன? சமத்துவத்திற்கு தூரமில்லை. இந்த நியாயப்படி சரீரத்தின் பிராண நியமத்திலுள்ள பஞ்சபூததத்துவ ஜயத்தினால் மரணத்தையும் ஜெயித்து சித்தர் நிலைபெறலாம் என்பது தெளிவாகும்.

T, K. ராமபத்ர சர்மா.

---

ஞானமும் வரதராஜ க்ஷேத்திரத்தை அடையும் புண்ணியமும் வன்மையும் பெற்று அந்த ஹரிக்ஷேத்திரத்தையடைந்து நரசிம்ம மூர்த்தியினால் கஜவடிவம் நீங்கப் பெறுவாய்" என்று அனுக்கிரகம் செய்து சென்றனள். அவ்வாறே யானைவடிவமடைந்த இந்திரன் காஞ்சியில் ஹரிக்ஷேத்திரத்தையடைந்து நரசிம்மமூர்த்தியைத் தனது ஹ்ருதயத்தில் தியானம் செய்ய அவர் அவனது ஹ்ருதயத்தினின்றும் வெளிப்பட்டு அந்தக்கஜரூபத்தைத் தனது கைகளால் இரண்டாகப்பிளந்தனர். உடனே இந்திரன் சாபத்தினின்று நீங்கித் தனது உருவத்தைப் பெற்றுச் சென்றனன். நரசிம்மமூர்த்தி இந்திரனுடைய அந்தக்கஜ ரூபத்தைப் பர்வதமாக அநுக்கிரகம் செய்து கிழித்த ஹ்ருதயமாகிய விடத்தைக் குகையாகக் கொண்டு அதில் யோகிகளைப் போல் யோகாசனரூடராய் வீற்றிருந்ததனால் குஹா நரசிம்மர் எனப்பெயர் பெற்று விளங்குகின்றனர். வரதராஜமூர்த்தியும், அந்த யானை வடிவாகிய மலையின்மேல் வீற்றிருந்ததலால் அத்திகிரிநாதர் என்று பெயர் பெற்றனர். அம்மலையும் அத்திகிரி எனப்பெயர் பெற்றது.

இந்திரன் குஹா நரசிம்மமூர்த்தியினால் சாபவிமோசனமுண்டாகிச் செல்லும் பொழுது அத்திகிரியினின்றும் இரண்டு சிறுபிள்ளைகள் வரக்கண்டனன், அவ்விருவரும் அதிசுந்தரமுடையவர்களாயும் வேதசாரமே பிழம்பாய்த் திரண்டிருப்பது போல பொலிவு பெற்றிருக்கும் திருமுகமண்டலம் உடையவர்களாயும் இருப்பதைப் பார்த்து அதிசயித்து அவர்களை நோக்கி " ஓ, சிறுவர்களே, நீங்கள் யாவர் ? உங்களது ஆச்ரமம் எது ? இவ்வழியாய் வரும் காரணம் என்னை? இம்மலையில் எப்பொழுது ஏறினீர்கள் ? இவை எனக்குத் தெரிவியுங்கள்" என்றனன். "ஐயா, நாங்கள் சிருங்கிபேருடைய பிள்ளைகள். எங்கள் குலம் பிராமண குலம், எங்களுக்குப் பெயர் ஹேமன், சுக்லன், எங்கள் சூத்திரம் வைகானச சூத்திரம், எங்கள் ஆச்ரமம் பிரமசரியாச்ரமம். எங்கள் ஆசாரியர் கௌதம முனிவர். யாங்கள் வியாகரண சூத்திரங்களிலும் மீமாம்ஸா சாஸ்திரங்களிலும் வல்லவர்கள். இதுவரையில் மரபு முதலியவற்றைக் கூறினோம்.

இனி வந்ததற்குக் காரணங் கூறுகின்றோம். கொங்கண தேசத்தில் எங்களாசாரியருடைய ஆச்ரமம். அவர் விஷ்ணுமூர்த்

தியின் பூஜை நிமித்தம் எங்களைப் பார்த்து தீர்த்தமும் சமித்தும் கொண்டுவரும்படி கட்டளையிட்டனர். யாங்கள் அவர் கட்டளைப்படி ஒரு சுத்தமான பாத்திரத்தில் தீர்த்தத்தை நிரப்பிப் பரிசுத்தமான இடத்தில் மூடாமல் வைத்து விட்டுச் சமித்துக்களுக்காக ஒரு மரத்தின் மேலேறிச் சமித்துக்களை யொடித்துக் கொண்டு கீழிறங்கித் தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு ஆச்ரமத்தையடைந்து ஆசிரியர் முன் தீர்த்தத்தை வைத்தோம். அப்பொழுது அத்தீர்த்தத்தினின்றும் ஒரு சிறிய பல்லி துள்ளி வெளியே விழுந்தது. நாங்கள் தீர்த்தத்தை மூடாமற்கொண்டு வந்து வைத்ததையும், அதினின்றும் பல்லி வெளியே குதித்ததையும் ஆசிரியர் கண்டு "அறிவிலிகளே, என்ன காரியம் செய்தீர்கள். நீங்கள் தீர்த்தத்தை மூடாமல் வைத்தபடியினாலல்லவா அதில் பல்லி விழுந்தது. இனி இத்தீர்த்தம் பூஜைக்காகாது. நீங்களும் பூஜைக்கு விக்கினம் செய்தவர்களானீர்கள்." என்று கோபித்துப் 'பல்லிகளாகப் போகக் கடவீர்கள்' என்றும் சபித்தனர். "இந்திரனே, நாங்கள் அச்சாபத்தை யேற்றவர்களாய் வரதராஜர் விற்றிருக்கின்ற இந்த மலையருகிலுள்ள விருக்ஷத்தில் பல்லிகளாய் வாழ்ந்திருந்தோம். உன்னுடைய கஜரூபத்தை நாசிம்ம மூர்த்தி பிளக்கின்ற காலத்தில் உனது துதிக்கையினால் நாங்கள் வாழ்ந்திருந்த மரத்தை முறித்தனை. அப்பொழுது இந்த அத்திகிரியினுடைய பின் பக்கத்தில் துள்ளிப் பாய்ந்தோம். உடனே சாபம் நீங்கப் பெற்றோம். இனிப்போய் வருகின்றோம்" என்று மீட்டும் சொல்ல, இந்திரன் மகிழ்ந்து அச்சிறுவர்களைக் கையினால் தடவிக் கொடுக்க அவர்கள் தங்களிடம் போய்ச் சேர்ந்தார்கள். பின் சாபம் நீங்கிய மகிமை விளங்கப் பொன்னினாலும் வெள்ளியினாலும் இரண்டு பல்லி உருவங்களை அமைத்து, மேலே பிரதிஷ்டை செய்து இவ்விடத்தில் இவ்விரண்டு பல்லிகளையும் கையினால் ஸ்பரிசித்து இவ்விடத்திற்றானே நின்று 'எவர்கள் இந்த அத்திகிரியைத் தரிசனஞ் செய்கின்றார்களோ அவர்கள் ஏகாதசியில் அகோராத்திரம் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்தடையும் விரத பலனை யடையக்கடவர்கள்" என்று வரமளித்துச் சென்றனன். ஆகலான், ஹேமசுக்கிரர்களுடைய சாபம்நீங்குமாறுசெய்த அத்திகிரியைத் தெரிசிக்கப்பெற்றவர்களும்பரமபதத்தையடைவார்கள்.

## மஹிமை.

பூர்வத்தில் சரயு நதிக்கரையில் வசிக்கும் பாரத்துவாஜ குலத்தில் பிறந்த சுக்லவேதியனான கணு என்னும் பிராமணனொருவன் சகல சாஸ்திர சம்பன்னனாயும், தனுர் வித்தையில் சிறந்தவனாயும், பிராமணவேடத்தில் சிறிதும் குறையில்லாதவனாயும் இருந்தனன், அவன் பூர்வகர்மத்தால் பாவகர்மத்திலாசை யுடையவனாய் எப்பொழுதும் யாத்திரை செய்வதிலேயே மிகவிருப்பமுடையவன் போல் யாவருக்கும் புலப்படுத்தி யாத்திரார்த்தமாய்ச் செல்பவரோடு தானும் சென்று மலை, வனம், துர்க்கம் முதலியமறைவான இடங்களிற்போகுங்கால் தான்கற்றிருக்கும்வில்வித்தையினுடைய சாமர்த்தியத்தினால் ஒருவரையும் விடாது கொன்று, அவர்கள் பொருள்களைக் கொள்ளைகொண்டு தன்னிடஞ் சென்று மனைவி மக்களுடன் வாழ்ந்திருந்தனன். ஒரு நாள் இவன் முன் போல் யாத்திராவாசிகளைக் கொலை செய்கின்ற பொழுது அவர்களில் நைமிசாரண்யவாசியான ஒரு வீரனிருந்தனன். அவ்வீரன் இவ்வேதியன் செய்கையைக் கண்டு மனம் புழுங்கி அவனைப்பிடித்து இறுகக்கட்டி "நீ என் செய்கின்றாய்? இந்தக் கொலைத்தொழிற்கா இந்தப் பிராமண வேடம்?" என்று அவனை இகழ்ந்து கூறி " நீ கொலைத் தொழிற் பூண்டவனாயினும் பிராமண குலத்திற் பிறந்தவனாதலால் உன்னைக்கொலை செய்தல் பழுது என்று கூறி ஒரு கத்தியைஎடுத்து அவனது யக்ஞோபவீதத்தையும் சிகையையும்அறுத்துப் பின்னர் அவனைக்கட்டிய கட்டவிழ்த்து "இவ்வழியே ஓடிப்போவாய்; இனிஇவ்வழி ஒருபொழுதும்திரும்பாதே" என்று அச்சமுறுத்தி ஓட்டிவிட்டனன். அந்தப்பிராமணன் அவன் இறுக்கிய இறுக்கினால் சரீரம் புண்பட்டு ஓடிப்போவதற்கு முடியாமல் பையப்பைய நகர்ந்து தக்கோலம் என்கிற ஊரையடையும் பொழுது பூர்வபுண்ணியவசத்தால் இந்த அத்திகிரியைக் கண்டு மரணமடைந்தனன். அந்த அத்திகிரியினுடைய தரிசன விசேஷத்தால் விஷ்ணு தூதர்கள் வந்து அவனைத் திவ்யவிமானத்திலேற்றிக்கொண்டு விஷ்ணுலோகம் போய்ச் சேர்ந்தார்கள்.

மூன்றும் அத்தியாயம் அத்திகிரி வரலாறு முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

# நான்காவது அத்தியாயம்.

## விஷயசூசனை.

[இந்த அத்தியாயம் அத்திகிரியில் திருமால் வாதராஜ மூர்த்தியாய் வருவதற்குக் காரணம் பிரமனுக்குச் சிருஷ்டித்தண்டம் கொடுத்தற்கு எனவும்; வேகவதி என்னும் நதி சிருஷ்டித்தண்டம் பெறுதற்குப் பிரமன் செய்யத்தொடங்கிய யாகத்தை அழித்தற்கு வந்த சரஸ்வதி தேவி எனவும்; அந்த நதியால் யாகத்துக்கு யாதொரு இடையூறும் வாராவண்ணம் வாத ராஜர் காத்தவகை இது எனவும்; இந்த அத்திகிரியில் வாதராஜப்பெரு மாள் வைகுண்டம் முதலியவைகளைக் காட்டிலும் மிகப்பிரியமுடையரா யிருத்தற்குக் காரணம் இது எனவும் விளக்குவது.]

## வரதராஜமூர்த்தி வரலாறு,

சங்குசக்ர கதா தாரியாய், ச்யாமளவர்ணராய், ஸர்வாபரண பூஷிதராய், நீலமணிபோற் சுந்தராய், செந்தாமரைக் கண்ணராய் ஸ்ரீவத்ஸராய், ஸ்ரீதராராய், ஸ்ரீமானாய், பத்மாக்ஷராய். பத்மநாப ராய், இரத்னகர்ப்பராய், கிரீடகுண்டலதாரியாய்ச் சவ்யவாம பாகங்களில் ரமா பூமியாகிய மங்கையரிருவர் சாமரைகள் அசை க்கப் புண்ணியகோடி விமானத்தில் வீற்றிருந்து பிரமனுக்கும் தனது பக்த ஜனங்களுக்கும் சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கும் வரதராஜமூர்த்தி பிரமனுக்குச் சிருஷ்டி தண்டங்கொடுத்தவரலாற் றைக் கூறுகின்றேன்.

தாம் தாம் சிறந்தவராம் என்று வாதாடி முன்சென்ற சரஸ் வதி, இலக்ஷ்மி என்ற அவ்விருதேவியரும் அவ்வளவிலொழியாது மீளவுங் குரோதத்தையே மேற்கொண்டு பிரமனிடஞ்சென்று "எங்களிற் சிறந்தவள்யாவள்'' என்று கேட்டனர். பிரமனும் இந்திரனைப்போலவே "இலக்ஷ்மியே சிறந்தவள்" என்று கூறி னன். அதுகேட்ட சரஸ்வதி கோபமடைந்து "இந்திரனைச் சபித்தோம்; இவர்கணவராயிருப்பதால் சபிக்கலாகாது" என்று எண்ணிப் பிரமதேவன் கையிலிருக்கும் விஷ்ணு மூர்த்தியினால் கொடுக்கப்பட்ட தனது அம்சமாகிய சிருஷ்டி தண்டத்தைப்